"DINAMALAR"

PAGE NO: 02 DATE: 24.11.21




புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் விழிப்புணர்வு பிரசாரத்தை, துணைவேந்தர் குர்மீத் சிங் துவக்கி வைத்தார்.

# புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் விழிப்புணர்வு பிரசாரம் துவக்கம்

**புதுச்சேரி, நவ. 24–**

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் ' ஆண்டிமைக்ரோபியல் விழிப்புணர்வு வாரம் – 2021" என்ற பிரசார துவக்க நிகழ்ச்சி நடந்தது.

பாக்டீரியா, பூஞ்சை, வைரஸ் உள்ளிட்ட ஒட்டுண்ணிகளால் ஏற்படும் தொற்று நோய்களுக்கு சிகிச்சை அளிக்க நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகள் பயன்படுகிறது.

இதனை தவறாக பயன்படுத்துவதால் நுண்ணுயிரிகள் ஆண்டிமைக்ரோபியல் எதிர்ப்பை உருவாக்குகின்றன.

இதுகுறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் நுண்ணுயிர் எதிர்ப்பிகளின் தவறான பயன்பாட்டைக் கட்டுப்படுத்த உலகளாவிய முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

இதற்காக, உலக சுகாதார அமைப்பு ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 18 முதல், 24 வரை உலக நுண்ணுயிர் எதிர்ப்பிகள் விழிப்புணர்வு வாரமாக அனுசரிக்கப்படுகிறது.

அதன்படி, புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் நடந்த விழிப்புணர்வு பிரசார நிகழ்ச்சியை, பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங் துவக்கி வைத்தார்.

பேராசிரியர்கள் தேவி பிரசாத், ஜோசப் செல்வின் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

DINAMANI

PAGE NO: 03 DATE: 24.11.21

# புதுவைப் பல்கலை. தொலைநிலை இயக்ககத்தில் 20 புதிய படிப்புகள்

**புதுச்சேரி, நவ.23:** புதுவை பல்கலைக்கழக தொலைநிலைக் கல்வி இயக்ககத்தின் சார்பில், நிகழாண்டு 20 புதிய படிப்புகள் தொடங்கப்பட்டன.

புதுவை பல்கலைக்கழகத்தில் உள்ள தொலைநிலைக் கல்வி இயக்ககத்தில் கடந்தாண்டு வரை 5 எம்பிஏ பட்டப்படிப்புகள், 4 முதுநிலை படிப்புகள், 2 இளநிலை படிப்புகள் என 11 படிப்புகள் வழங்கப்பட்டு வந்தன.

நிகழாண்டில் 20 புதிய பட்டப்படிப்புகள் தொடங்கப்பட்டன. அதன்படி, புதிய எம்பிஏ படிப்புகளாக சந்தைப்படுத்துதல், நிதி, மனிதவள மேலாண்மை, சர்வதேச வணிகம், பொது, சுற்றுலா, செயல்பாடுகள், விநியோக சங்கிலி மேலாண்மை ஆகிய படிப்புகளும், எம்.காம்., எம்.ஏ. ஆங்கிலம், ஹிந்தி, சமூகவியல் உள்ளிட்ட முதுநிலை பட்டப்படிப்புகளும், பி.ஏ., பி.காம்., பிபிஏ, இதழியில், மாஸ் கம்யூனிகேஷன் உள்ளிட்ட படிப்புகளும் தொடங்கப்பட்டன.

கரோனா பரவல் காரணமாக, புதுவை பல்கலைக்கழகத்தில் புதிய படிப்புகளில் நிகழாண்டு மாணவர்கள் சேர்க்கை தாமதமாகவே, கடந்த 17-ஆம் தேதி தொடங்கியது. இதன் தொடக்க நிகழ்வில் புதுவைப் பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங் பங்கேற்று, மாணவர்கள் சேர்க்கைக்கான இணைய தளத்தை தொடக்கிவைத்தார். பல்கலைக்கழக இயக்குநர் ராமய்யா மற்றும் துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.